செ.வெ.எண்.11 நாள்: 04.09.2017

## திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், 25 நபர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கினார்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (04.09.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட வழங்கல் துறையின் சார்பாக நாங்குநேரி வட்டத்தை சார்ந்த 25 நபர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகளை (SMART CARD) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மனுக்கள் பதிவு செய்யும் அறைக்கு அருகிலுள்ள கூட்டங்கில் மனு கொடுக்க வந்திருந்த மாற்றுத்திறனாளிகள் தனியாக அமர வைக்கப்பட்டிருந்தனர். அவர்களிடம் முற்பகல் 11.30 மணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே நேரடியாக வந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி உடன் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். மேலும், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து முதியோர் உதவித்தொகை, முதிர்கன்னி உதவித்தொகை, பட்டா மாறுதல், குடிநீர், சாலை வசதிகள் உள்பட பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி, விரைவில் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மூலம் பெறப்பட்டு நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். விண்ணப்பதாரர்களுக்கு உடனுடக்குடன் பதில் அனுப்ப வேண்டும் என உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.சங்கரலிங்கம், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி